**கூடுதல் சார்பு நீதிமன்றம்,**

**திருநெல்வேலி**

**முன்னிலை:- திரு.G.இசக்கியப்பன், பி.பி.ஏ.,எல்.எல்.பி**

**கூடுதல் சார்பு நீதிபதி, திருநெல்வேலி**

2024 ம் ஆண்டு பிப்ரவரி மாதம் 08 ம் நாள் வியாழக்கிழமை

**அசல் வழக்கு எண். 256/2022**

**(TNTL 0500 1062 2022)**

கனரா வங்கி, பெருமாள்புரம் கிளை,
இதன் முதன்மை மேலாளர் மூலமாக. .... வாதி

/எதிர்/

1. P.ராகவர்த்தினி
2.பெருமாள்
3. மரிய அந்தோணி பிரான்சிஸ் ... பிரதிவாதிகள்

இந்த வழக்கானது என் முன்பு இறுதியாக 11.01.2024 அன்று விசாரணைக்கு வந்த போது வாதி தரப்பில் கற்றிறிந்த வழக்கறிஞர் திரு.D.முருகன், அவர்கள் முன்னிலையாகியும், பிரதிவாதிகளுக்கு நீதிமன்றத்தில் இருந்து அழைப்பாணை சார்வு செய்யப்பட்டும், பிரதிவாதிகளை நீதிமன்றத்தில் அழைத்த போது முன்னிலையாகாமல் தோன்றாத்தரப்பினராக கருதப்பட்டு ஒருதலைபட்சமாக்கப்பட்டும், வாதி தரப்பில் எடுத்துரைத்த வாதுரைகளை கேட்டும், ஆவணங்களை பரிசீலனை செய்தும், இது நாள் வரை இந்நீதிமன்ற பரிசீலனையில் இருந்து வந்த வழக்கில் இன்று இந்நீதிமன்றம் வழங்கிடும்...

## தீர்ப்புரை

1. வழக்கானது, பிரதிவாதிகள், வாதி வங்கிக்கு செலுத்த வேண்டிய தொகை ரூ.3,61,046/- க்கு வழக்கு தாக்கல் செய்த நாள் முதல் தொகை செலுத்தும் காலம் வரை ஆண்டுக்கு 9.80% பின்வட்டி கோரியும் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**2. வாதி தரப்பு வழக்குரையின் சுருக்கம் :-**

1ம் பிரதிவாதியின் படிப்பு செலவிற்காக பிரதிவாதிகள் வாதி வங்கியில் ரூ.1,28,250/- கல்வி கடன் கேட்டு, வாதி வங்கியிடம் 1.03.2010 அன்று ரூ.1,28,250/- ஐ கடனாக பெற்றுக்கொண்டு கல்விக்கடன் ஒப்பந்தம் மற்றும் உறுதிமொழி கடிதம் எழுதிக்கொடுத்துள்ளார்கள். மேற்படி கடன் தொகையை 10% பின்வட்டியுடன் 60 மாத தவணைகளில் செலுத்துவதாக ஒப்புக்கொண்டுள்ளார். அவ்வாறு செலுத்தாதபட்சத்தில் அபராத வட்டி 2% கூடுதலாக செலுத்துவதாக ஒப்புக்கொண்டுள்ளார்கள்.மேற்படி கடனிற்கான தற்போதைய வட்டிவிகிதம் 9.80%ஆகும். வாதி வங்கி பலதடவைகள் கடனை செலுத்தும்படி பிரதிவாதிகளிடம் கேட்ட பின்பும் அவர்கள் சரிவர செலுத்தவில்லை. பிரதிவாதிகள் கடனை ஒப்புக்கொண்டு 7.02.2018, 7.12.2018 மற்றும் 01.06.2021 தேதிகளில் வாதி வங்கிக்கு கடன் ஒப்புதல் கடிதம் எழுதிக்கொடுத்துள்ளார்கள். பிரதிவாதிகள் கடன் தொகையை ஒழுங்காக செலுத்தாத காரணத்தினால் 19.02.2022 தேதி வாதி வங்கி வழக்கறிஞர் மூலம் அறிவிப்பு அனுப்பியது, மேற்படி அறிவிப்பு 1,2 பிரதிவாதிகள் பெற்றுக்கொண்டு பதில் அறிவிப்பு எதுவும் அனுப்பவில்லை, 3ம் பிரதிவாதி

அறிவிப்பை பெற்றுக்கொள்ளாமல் திருப்பி அனுப்பிவிட்டார், கடன் தொகையையும் திரும்ப செலுத்தவில்லை. எனவே பிரதிவாதிகள் வாதி வங்கிக்கு செலுத்தவேண்டிய தொகை ரூ.3,61,046/- மற்றும் பின்வட்டியை செலுத்தகோரி வாதியால் இந்த வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

3. மேலே குறிப்பிட்டுள்ளது போல, பிரதிவாதிகளை நீதிமன்றத்தில் அழைத்த போது முன்னிலையாகமல் தோன்றாத்தரப்பினராக கருதப்பட்டு ஒருதலைபட்சமாக்கப்பட்டுள்ளார்கள்.

4. **தீர்வு :-** இந்த வழக்கில் தீர்மானிக்கப்படவேண்டிய பிரச்சினை என்னவெனில், வாதி கோரியுள்ள பரிகாரங்கள் வாதிக்கு கிடைக்கத்தக்கதா ? இல்லையா ? என்பதோயாகும்.

வாதி வங்கியிடமிருந்து, பிரதிவாதிகள் பெற்ற கடன் தொகை ரூ.3,61,046/- பின்வட்டியுடன் கேட்டு இவ்வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

5. வாதி தரப்பில், வாதி வங்கியின் மேலாளர் வா.சா.1 ஆக விசாரிக்கப்பட்டு, வா.சா.ஆ.1 முதல் வா.சா.ஆ.11 வரையிலான ஆவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளன. பிரதிவாதிகள் தரப்பில் ஆஜரில்லாத காரணத்தினால் ஒருதரப்பாக்கப்பட்டுள்ளார்கள்.

6. வாதி தரப்பு சாட்சியம் மற்றும் சான்றாவணங்களை பரிசீலனை செய்யும் போது, வாதி வங்கியிடமிருந்து, பிரதிவாதிகள் ரூ.1,28,250/- கல்விக்கடனாக பெற்றுக்கொண்டு, நாளது தேதி வரை அசலும், வட்டியும் செலுத்தாமல் இருந்து வந்ததால் வாதி வங்கி வா.சா.ஆ.5 வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பியும் கடன்

தொகையை பிரதிவாதிகள் திரும்ப செலுத்த முன்வரவில்லை. வாதி தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள வா.சா.ஆ.1 முதல் வா.சா.ஆ.11 வரையிலான ஆவணங்களை பரிசீலனை செய்யும் போது, பிரதிவாதிகள், வாதி வங்கியிடம் மேற்படி கடன் தொகையை பெற்றுக்கொண்டு திருப்பிச் செலுத்தவில்லை என்று மெய்ப்பிக்கும் வகையிலான சாட்சியங்கள் முன்னிடப்பட்டுள்ளது என்பது தெளிவாகிறது. வாதி தரப்பில் வழக்குரையில் குறிப்பிட்டுள்ள விவரங்களை பிரதிவாதிகள் தரப்பில் நீதிமன்றத்தில் முன்னிலையாகி, வாதி வங்கியிடம் பிரதிவாதிகள் கடன் பெறவில்லை என்றோ, வழக்கு விவரங்கள் உண்மையானவை இல்லையென்றோ குறிப்பிட்டு மறுக்கத் தவறியுள்ளார். பிரதிவாதிகள், வாதி வங்கிக்கு ரூ.3,61,046/- மற்றும் பின்வட்டித் தொகைகளை செலுத்த கடமைப்பட்டவர் என்று முடிவு செய்ய வேண்டியது அவசியமாகிறது.

7. மேலே குறிப்பிட்டுள்ளது போல, பிரதிவாதிகளுக்கு நீதிமன்றம் மூலம் அழைப்பாணை சார்பு செய்யப்பட்டும், பிரதிவாதிகள் நீதிமன்றத்தில் முன்னிலையாகி, வழக்கு விபரங்களை குறிப்பிட்டு மறுத்து வாதி கோரியுள்ளவாறு கடன் தொகை செலுத்தக் கடமைப்பட்டவர் இல்லை என எதிர்வழக்குரை தாக்கல் செய்யாத நிலையில், வாதியின் வழக்குரை, வா.சா.1 ன் சாட்சியம் வா.சா.ஆ.1 முதல் வா.சா.ஆ.11 வரையிலான சான்றாவணங்களை பரிசீலனை செய்யும் போது, வாதி தரப்பில் வழக்கு தெளிவாக மெய்பிக்கப்பட்டுள்ளது என்பதால், வாதி கோரியுள்ள பரிகாரம் வாதிக்கு கிடைக்கத்தக்கது என முடிவு செய்யப்படுகிறது.

8. இறுதியாக, வாதி வங்கிக்கு, பிரதிவாதிகள் தனித்தோ கூட்டாகவோ ரூ.3,61,046/- செலுத்தவேண்டும் என்றும் வழக்குரை தேதி முதல் தொகை முழுவதும் வசூலாகும் காலம் வரை அசல் தொகையான ரூ.1,28,250/- க்கு ஆண்டு ஒன்றுக்கு 9 சதவீதம் பின்வட்டியும் சேர்த்து செலுத்த வேண்டும் என்றும், வாதியின் வழக்கு செலவுத்தொகையுடன் அனுமதித்து தீர்ப்பளிக்கப்படுகிறது. தொகை செலுத்த கால அவகாசம் இவ்வுத்தரவு கிடைக்கப் பெற்ற மூன்று மாதங்களுக்குள் செலுத்த வேண்டும் என்று உத்தரவிடப்படுகிறது.

இந்த தீர்ப்புரை என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் நேரடியாக கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு என்னால் சரிபார்க்கப்பட்டு இன்று 2024- ம் ஆண்டு பிப்ரவரி திங்கள் 08-ம் நாள் இந்நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

G ESSAKIAPPAN
Digitally signed by G ESSAKIAPPAN
Date: 2024.02.08 18:43:22 +0530

கூடுதல் சார்பு நீதிபதி,
திருநெல்வேலி.

**1. வாதி தரப்பு சாட்சிகள் :-**

வா.சா.1 - இசக்கிமுத்து

**2. வாதி தரப்பு சான்றாவணங்கள் :-**

| | | |
|---|---|---|
| வா.சா.ஆ.1 | 01.03.2010 | பிரதிவாதிகள் வாதி வங்கிக்கு எழுதிக்கொடுத்த கடன் விண்ணப்பம் |
| வா.சா.ஆ.2 | 01.03.2010 | பிரதிவாதிகள் வாதி வங்கிக்கு எழுதிக்கொடுத்த கல்விக்கடன் ஒப்பந்தம் |

| | | |
|---|---|---|
| வா.சா.ஆ.3 | 07.02.2018 | பிரதிவாதியால் செயல்படுத்தப்பட்ட துணை மற்றும் பாதுகாப்பு ஒப்பந்தம் அசல் |
| வா.சா.ஆ.4 | 01.06.2021 | பிரதிவாதியால் செயல்படுத்தப்பட்ட துணை மற்றும் பாதுகாப்பு ஒப்பந்தம் அசல் |
| வா.சா.ஆ.5 | 19.02.2022 | பிரதிவாதிகளுக்கு அனுப்பிய அறிவிப்பு அலுவலக நகல் |
| வா.சா.ஆ.6 | -- | 1ம் பிரதிவாதி அறிவிப்பை பெற்றுக்கொண்டதற்கான அஞ்சல் ஒப்புகை அட்டை அசல் |
| வா.சா.ஆ.7 | -- | 2ம் பிரதிவாதி அறிவிப்பை பெற்றுக்கொண்டதற்கான அஞ்சல் ஒப்புகை அட்டை அசல் |
| வா.சா.ஆ.8 | -- | 3ம் பிரதிவாதி பெற்றுக்கொள்ளாமல் திரும்ப வந்த அறிவிப்பு அசல் |
| வா.சா.ஆ.9 | -- | கடன் கணக்கு விபரப்பட்டியல் |
| வா.சா.ஆ.10 | 01.03.2010 | அனுமதி குறிப்பாணை |
| வா.சா-ஆ.11 | 07.12.2018 | பிரதிவாதியால் செயல்படுத்தப்பட்ட துறைச்சார்ந்த பாதுகாப்பு ஒப்புகை அசல் |

**3. பிரதிவாதிகள் தரப்பு சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள் இல்லை :-**

G ESSAKIAPPAN Digitally signed by G ESSAKIAPPAN Date: 2024.02.08 18:43:30 +0530

கூடுதல் சார்பு நீதிபதி,

திருநெல்வேலி.

கூடுதல் சார்பு நீதிமன்றம்,

திருநெல்வேலி.

அசல் வழக்கு எண்.256/2022

நாள் 08.02.2024.

நேரிய/வரைவு தீர்ப்புரை.